தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௫௧	திருவள்ளுவர் யாண்டு உ௰௬	மலர் ௯
	இராட்சச, மார்கழி	
	(1975 — டிசம்பர் — சனவரி)	

பாரதிதாசனின் 'கதர் இராட்டினப் பாட்டு'

இரா. இளவரசு, எம். ஏ , பி. எச்டி ,

01 இந்திய விடுதலை இயக்கத்தில் பாரதிதாசனுக்குப் பெரிதும் ஈடுபாடு இருந்தது என்பது பலர்க்குத் தெரியாத – வியப்பளிக்கக் கூடிய ஓர் உண்மை. பழுத்த ஆத்திகராகத் தம் வாழ்வைத் தொடங்கிய அவர் தேசியவாதியாக — 'காங்கிரசு'க்காரராக இருந்தார். அப்போது இந்திய விடுதலை இயக்கத்தை வலுப்படுத்தும் வகையில் பாடுபட்டார். அதற்காக ஏராளமான பாடல்களை எழுதினார். அவை சிறிய நூல்களாகவும் தனிப் பாடல்களாகவும் வெளிவந்தன. பாரதிதாசனை முழுமையாகக் காண்பதற்கு அப்படைப்புகள் இன்றியமையாதன. அவற்றுள் ஒரு சிறு நூலை மட்டும் ஆய்வு நோக்கில் அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரை.

1.0 பாரதிதாசன், கதரை ஆடையாக உடுத்திக் கதர் மூட்டையை முதுகிலே சுமந்து வீடுதோறும் விற்றார். தம் குழந்தை சரசுவதிக்கு அரைஞாண் கட்டுவதற்குக் கூட இராட்டையில் நூற்ற நூலையே தேடி எடுத்தார்.[1] கதர் இயக்கத்தோடு தம்மைப் பிணைத்துக் கொண்டார். அதன் விளைவே 'கதர் இராட்டினப் பாட்டு'. இந்நூல் முன்னரே எழுதப் பெற்றதாயினும் 1930-ஆம் ஆண்டில் தான் 'காசி. ஈ. லக்ஷ்மண் பிரசாத்' என்பவரால் புதுவையில் இருபது பக்க அளவில் ஒன்றே காலணா விலையில் வெளியிடப்பட்டது.[2]

1.1 நூல் 'ஓம்' பிள்ளையார் சுழி (உ) ஆகியவற்றோடு 'வந்தேமாதரம்' எனத் தொடங்கி 'வந்தேமாதரம்' என முடி

கிறது. அட்டையின் முகப்பில் இராட்டினத்தின் படமும் காந்தி யடிகளின் அரையுருவப் படமும் இடம் பெற்றுள்ளன நூலி னகத்தே கதர், இராட்டினம் பற்றிய ஐந்து பாடல்களும் இரண்டு கருத்து விளக்கப் படங்களும் உள்ளன இவற்றோடு நூல் தொடக்கத்தில் வெளியீட்டாளரின் முகவுரையும் அதையடுத்து, 'பாரத தேவி' எனுந் தலைப்பில் ஒரு நேரிசை வெண்பாவும் 'ஜன்ம பூமியின் சிறப்பு' எனுந் தலைப்பில் ஒரு நேரிசை வெண் பாவும் அமைந்துள்ளன நூலின் முடிவாகப் 'பாரத தேவி வாழ்த்து' எனுந் தலைப்பில் பதினான்கு வரி நிலை மண்டில ஆசிரியப்பா இடம் பெற்றுள்ளது.

1.2 கதர். இராட்டினம் பற்றிய ஐந்து பாடல்கள். முறையே 'காந்தியடிகளும் கதரும்,' 'சுதந்திர தேவியும் கதரும்,' 'தேசத்தாரின் பிரதான வேலை,' 'இராட்டினச் சிறப்பு,' 'அன்னைக்கு ஆடை வளர்க' எனுந் தலைப்பின ஐந்து பாடல் களுக்கும் முறையே 'வீரம்,' 'சிங்காரம்,' 'சாந்தம்,' 'சிங் காரம்.' 'சோகம்' எனச் சுவைகள் சுட்டப்பட்டுள்ளன. முதல் நான்கும் இசைப் பாடல்கள். அவற்றுக்குப் பண்ணோடு தாளம் அல்லது மெட்டு குறிக்கப்பட்டுள்ளது. முதல் பாட்டுக் குரிய 'ஹார்மோனிய ஸ்வரம்' அலகிடப்பட்டு 'சாப்பு' எனுந் தாளக் குறிப்போடு நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பாட்டுக்குரிய 'இராகம் — பியாக், தாளம்—சாப்பு.' மூன்றும் பாட்டுக்கும், நான்காம் பாட்டுக்கும் முறையே 'கொச்சிமலை குடகுமலை எங்களது நாடு' என்ற குறத்திப் பாட்டின் மெட்டும் 'தன்னையறிந்தின்பமுற வெண்ணிலாவே' என்ற மெட்டும் குறிக்கப்பட்டுள்ளன. ஐந்தாம் பாட்டு பஃறொடை வெண்பாவில் அமைந்தது. அதற்குப் பண்ணோடு தாளமோ மெட்டோ குறிக்கப்படவில்லை.

1.2.1 இந்த இசைக் குறிப்புகள். சுவை சுட்டுதல், பட விளக்கம் முதலியன நாடு முழுவதும் இப்பாடல்கள் பாடப் பெற்று மக்களனைவரும கருத்துக்களை எளிதில் புரிந்து கதரி யக்கத்தில் சேரவேண்டுமெனப் பாரதிதாசன் கருதியதைக் காட்டுகின்றன.

1 3. 'காந்தியடிகளும் கதரும்' என்னும் முதற்பாட்டு, கதர்க்குல்லாயணிந்த தேசியத் தொண்டனொருவன், யானை மேலமர்ந்துள்ள பறையறையும் வள்ளுவனை நோக்கி 'அன்னி யர் நூலைத்தொடோம் என்ற சேதி அறைந்திடடா புவிமுற் றும்.' எனக் கூறும் அமைப்பில் தொடங்குகின்றது. இவ்வ

மைப்பே படமாக ஒரு பக்க அளவு வரையப்பட்டுள்ளது 'சுதந்திர தேவியும் கதரும்' எனும் இரண்டாம் பாட்டில் 'சுதந்திரம்' ஒரு மங்கையாக உருவகப்படுகிறது. அம்மங்கையைக் கண்டு காதற்கொண்ட ஓர் ஆண் மகனிடம் அவள், 'இராட்டினத்தில் நூலிழைத்து நெய்து உடுப்பாய், அந்நியர் நூலைத் தொலைப்பாய், அப்புறம் என்னைக் கலப்பாய்' எனக் கூறி மறைந்து விடுகிறாள். பாட்டு, இருவர் தம் உரையாடல் அமைப்பில் செல்கிறது. 'தேசத்தாரின் பிரதான வேலை' எனும் மூன்றும் பாட்டு 'பஞ்சு விளைப்பீர், இழை நூற்பீர்' எனப் பாரத நாட்டாரை ஆசிரியரே வேண்டிக் கொள்வதாக அமைகிறது. 'இராட்டினச் சிறப்பு' எனும் நான்காம் பாட்டு, பாடுவோனாகிய தலைவன், இராட்டினத்தைத் தலைவியாக்கி அவளை முன்னிலைப் படுத்தி 'நாம் ஈன்ற பிள்ளையே சுதந்தரம்' எனப் பேசுவதாக அமைந்துள்ளது 'அன்னைக்கு ஆடை வளர்க' எனும் இறுதிப் பாட்டு பாஞ்சாலியாகப் பாரதத்தாளையும் துர்ச்சாதனனாக அதிகாரம் கொண்டவர்களையும் கண்ணனாகக் காந்தியடிகளையும் காட்டுகிறது. இப்பாட்டின் தொடர்பில் பாரதத்தாயின் ஆடையைத் தொப்பியணிந்த ஆங்கிலேயன் பறிப்பது போன்று ஒரு பக்க அளவில் கருத்து விளக்கப் படமொன்றும் காணப்படுகிறது.

1.3.1. மூன்றுவது பாட்டு மட்டும் ஆசிரியன் நேர்முகமாக நாட்டினரை நோக்கி வேண்டுகோள் விடுவதாக அமைகிறது. ஏனைய பாடல்களெல்லாம் நாடகப் பாங்கோடு ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களைக் களத்தில் காட்டி அவர்களின் உரையாடல், செயல்களை விளக்கிக் கதைச் சாயல் விரவ உருவாக்கியிருக்கும் ஆசிரியரின் கலை நுட்பம் குறிப்பிடத்தக்கது.

1.4 பாட்டுகளில் சொல்லப்படும் கருத்துக்களைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்.

'வேற்றவர் கை பாரோம்': 'அன்னியர் இந்நாட்டைச் சந்தையென்றாக்கினர். அவர் தம் சூழ்ச்சிகள் இனியும் செல்லா. அந்நியச் நூலைத் தொடோம்'

'இராட்டினச் சிறப்பு': 'இராட்டினம் பண்டு பாரதத்திலே பிறந்தது. ஊட்டமுறத் தோளுரமும், உடலழகும் ஊக்கமும் கொடுப்பது. அதைத் தொட்ட கைகள் விட்டதில்லை எனச் சுற்றினால் 'சுதந்தரம்' கிடைக்கும்.'

'கதரணிவீர்': பால் நுரைபோல் பாரதத்தில் பஞ்சு விளைத்துப் பனிமலை போல் அதனைத் தூய்மை செய்து சிலந்தியிழை போல் நூல் நூற்று வானம், புனல், சுடர் நாணும் படி வண்ணக் கதராடை செய்து குவிப்போம்.

'ஏதமில் காந்தி': 'அறம் வளர்க்க வந்த கண்ணக்காந்தி, இன்னல் செய்தார்க்கும் இடர் செய்திடாமல் இராட்டினம் சுற்றுவீர் கதரணிவீர் என்று சொன்ன மொழி வாழ்வினுக்கோர் அமுதம்.'

'எழில் பாரதத்தாய்': 'விண்கொள் இமய வெற்பை முடியாகவும் பண்கொள் குமரியைப் பாதமாகவும் கொண்ட பாரதம். போர் நின்ற வீரர்குலம் பூத்த நிலம். கனுவகல் கரும்பும் கதலியும் செந்நெலும் கொண்டது. நான் பாரத நற்புத்திரன் ஆக உடல் வளர்த்த நாடு என் உயிர்.'

15. ஐந்து பாட்டுகளும் வேறுபட்ட யாப்பமைப்பில் இயற்றப்பட்டுள்ளன படிப்பார் சிறிதும் சலிப்பின்றி அதிக ஈடுபாட்டோடு படிக்கவும் எளிதில் நினைவில் நிறுத்திக்கொள்ளவும் இவ்வோசை வேறுபாடு துணை செய்யும், வேறுபாட்டைப் புரிந்துகொள்ளும் வகையில் ஐந்து பாட்டுகளிலிருந்தும் நிரலே ஒவ்வொரு பகுதி கீழே தரப்படுகிறது,

i 'கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகின்றேன் அதைக்கேளே — நீவிர்
கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே தூளே தூளே'

ii "கன்னியுரைத்தது கேட்டிடுவீர் — உள்ளக்
காதல் இருப்பது மெய் எனிலோ — அட
சின்ன இராட்டின நூலிழைப்பாய் — அதில்
தீட்டின்றி நெய்தஉடை உடுப்பாய் ..."

iii "ஏனத்தினிற் சோறு கேட்கும்
ஏழையரும் யாரும் — நம்
ஏழையரும் யாரும் — பஞ்
சிழையை நூற்றுத்தறி நெய்வதால்
கொத்தடிமை தீரும்."

iv "கூட்டமுதம் நானுனக்கு ராட்டினப் பெண்ணே — அடி
கொஞ்சுகிளி நீ எனக்கு ராட்டினப் பெண்ணே"

v "முப்பத்து முக்கோடி மொய்ம்புடைய மைந்தர்களை
இப்புவியில் பெற்ற எழில்பார தத்தாளின்
ஆடை பறித்தார் அதிகாரம் கொண்டவர்கள்
ஓடி அவளின் உடைமீட்க வேண்டாமோ."

1.6. பாட்டுகள் அனைத்தும் எளிய சொற்களால் இயன்றன. பாட்டில் பயிலும் அடல். இன்னல். கன்னல், குலிசம், சூல், பானல். வெற்பு ஆகிய அரிய சொற்களில் சிலவற்றுக்கும் அங்கங்கே பொருள் தரப்பட்டுள்ளது. புத்திரன், சொர்னம், பிரதானம் சதர் முதலிய பிறமொழிச் சொற்களும். ஏனம், காப்பரிசி, சதை முதலிய வழக்குச் சொற்களும், 'பாரதத்தாள்.' 'பாரதர், ஆகிய புதிய சொல்வடிவங்களும் இடம் பெற்றுள்ளன. 'பால் நுரைபோல் பஞ்சு,' 'பானல் விழி.' 'பாளை பிளந்த சிரிப்பு,' 'தேனை ஈ மொய்த்தல் போல் இராட்டினத்தைச் சேர்ந்து சுற்றல்,' 'சிலந்தியிழை போல் மெல்லிழை' எனவரும் உவமைத் தொடர்களும், 'வாய்க் குமுதம்,' 'எழுச்சிக்கனல்' எனவரும் உருவகத் தொடர்களும், 'பொதி பொதி.' 'நெய்து நெய்து' எனவரும் அடுக்குத் தொடர்களும் குறிக்கத்தக்கன. 'இராட்டினம்' 'ராட்டினம்' 'அன்னியர்' 'அந்நியர்' என இருவகைச் சொல் வடிவங்கள் இடம் பெறுகின்றன. 'அறுபது கோடித் தடக்கைகள்' என ஓரிடத்தும் 'முப்பத்து முக்கோடி மொய்ம்புடை மைந்தர்கள்' எனப் பிறிதோரிடத்தும் மாறுபாடாக மக்கள் தொகை சுட்டப்படுகிறது.

1.7. இந்நூலுக்குப் பின்னர் வெளியான பாரதிதாசன் பாடல்களின் சாயலை இதில் ஓரளவு காணமுடிகிறது. 'பானல் விழியுடையாள்' 'பாளை பிளந்த சிரிப்பினிலே' என வரும் இந் நூற்றொடர்கள் 'புரட்சிக்கவி'யில் இடம் பெற்றுள்ள 'பானல் விழி மங்கையிடம்' பாளைச் சிரிப்பில் நான்' ஆகிய தொடர்களை நினைவுபடுத்துகின்றன. முதற் பாட்டு வள்ளுவனை நோக்கிப் பறை கொட்டு' என்று முதல் தொகுதி (வாளினை எடடா) யிலும் 'பெய்யும் முகிலின் இடிபோல் — அடடே பேரிகை முழக்கு' என்று இரண்டாம் தொகுதி (பகை நடுக்கம்) யிலும் உள்ள பாடல்களின் அமைப்பை ஒரு புடையொத்திருப்பதோடு 'காதலா கடமையா' நூலின் தொடக்கப் பகுதியை நினைவுறுத்துகிறது 'அறைந்திடடா' 'கன்னலடா' என வரும் 'அடா' விளி பாரதிதாசனின் பிற்காலப் பாடல்களில் 'பாரடா உனது மானிடப்பரப்பை" (முதல் தொகுதி) 'நகையோடு நோக்கடா' (அழகின் சிரிப்பு) என மிகுதியாக இடம் பெறுகிறது. 'பண்டை முதல் இழை நூற்பதிலே யாம்

'சிங்கம் — சிங்கம் — சிங்கம்' எனுந் தொடர் 'ஆண்மைச் சிங்கத்தின் கூட்டம்' எனும் முதல் தொகுதிப் பாடல் (சங்க நாதம்) வரியில் வீறு பெறுகிறது

1.8. 'சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்தவர் பாரதிதாசன்' என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பாரதிப் புலவனின் தர்க்கத்தைப் பாட்டுகளில் காண முடிகிறது. 'அறுபது கோடித் தடக்கைகள்' எனப் பாரதியின் பாரதநாட்டுப் பாடலொன்றில் (எங்கள் தாய்) வருந்தொடர் அப்படியே மூதற் பாட்டில் இடம்பெற்றுள்ளது. 'கலி தொலைத்துக் கிருதயுகம் காணப்பெறுவோமே' எனும் மூன்றும் பாட்டின் இறுதி 'இடிபட்ட சுவர்போல கலி விழுந்தான் கிருதயுகம் எழுக மாதோ' எனும் பாரதிப் பாடல் (புதிய ருஷிய) அடியின் மறுபதிப்பே. 'கூட்டமுதம் நானுனக்கு .. கொஞ்சு கிளி நீ எனக்கு' என இராட்டினப் பெண்ணை நோக்கிக் கூறும் நான்காம் பாட்டின் தொடக்கம் 'தோயுமது நீ எனக்கு — தும்பியடி நானுனக்கு' எனும் பாரதிப் பாடலை (கண்ணம்மா என் காதலி — யோகம்) நினைவு படுத்துகிறது பாரத தேவியைக் 'கடையுகம் முற்றினும் திறல் கெடாக்காளி' யாகவும் சுதந்தரத்தைக் 'காளியனுப்பிய கன்னி' யாகவும் பாரதிதாசன் காட்டுவதில் பாரதியின் கருத்து வீச்சைக் காண்கிறோம். அண்ணல் காந்தியைக் 'கண்ணக் காந்தி' யாகக் காணும் பாரதிதாசனின் பார்வை 'இடிமின்னல் காக்க குடைசெய்தான் என்கோ' எனும் பாரதி (மகாத்மா காந்தி பஞ்சகம்) வரியோடு ஒப்பு நோக்கத்தக்கது

சான்றெண் விளக்கம்

1. 'நினைவு மண்டபம்' — மன்னர் மன்னன், பாரதிதாசன் குயில். குரல் 1, இசை 7, 10—11—1967.
2. இந்நூலை அளித்துதவிய பாவேந்தரின் மகள் திருவாட்டி வசந்தா தண்டபாணி அவர்கட்கு நன்றியன், இதன் அடிப்படையிலேயே இக்கட்டுரை உருவாகியுள்ளது
   'தேசியகீதம் — கதர் இராட்டினம் பாட்டு' எனுந் தலைப்பில் இந் நூலே 1955-இல் திருச்சி முல்லைப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. நூலின் அமைப்பு நிலை மட்டுமே மாறுபட்டுள்ளது 1963-இல் சென்னை முத்தமிழ் நூலகப் பிரசுரம் வெளியிட்ட முல்லைக்காடு' மறுபதிப்பின் இறுதியில் 'நாட்டுப் பாடல்கள்' எனும் பகுதியில் 'கதர் இராட்டினப் பாட்டு' — இலுள்ள பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

தஞ்சை நகர்க்குச் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திருமிகு டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் 19—11—1975 இல் வருகை தந்தபோது கரந்தைப் புலவர் கல்லூரிச் சார்பில்

படித்தளித்த பாராட்டுரை

வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னைப் பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தர் திருமிகு டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்களே! தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்களே! ஆசிரிய உடன் பிறப்புக்களே! மாணவ மாணவிகளே! உங்கள் அனைவருக்கும் கரந்தைப் புலவர் கல்லூரியின் சார்பில் என் பணிவான வணக்கத்தையும். நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெருமைமிகு அருமைத் துணைவேந்தர் அவர்களே. தாங்கள் வயதாலும் அறிவாலும் அனுபவத்தாலும் மூத்து ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோராய் விளங்குகிறீர்கள். எனினும், இளைஞர்களை விடவும் சுறுசுறுப்புடன் பணியாற்றித், தாங்கள் துணைவேந்தர் பொறுப்பேற்று மூன்று மாதங்களே யாயினும் எண்ணற்ற நிர்வாகச் சீர்திருத்தங்களைச் செய்துள்ளீர்கள். தமிழ் நாட்டு முதலமைச்சரிடமும் கல்வியமைச்சரிடமும் மிகுந்த மதிப்பும் அன்பும் கொண்டு அவர்கள் எண்ணங்களை எல்லாம். அவர்கள் வாய்திறந்து கூறுவதற்குமுன் செயலாற்றிக் காட்டுகின்ற செயல்திறம்மிக்க துணை வேந்தராகத் தாங்கள் விளங்குகின்றீர்கள் அதிகாரங்கள் ஓரிடத்தில் மட்டும் குவிந்திருந்தால் ஆட்சி செம்மையாக நடைபெறாது அதிகாரம் பரவலாக்கப்பட்டால்தான் ஆட்சி மாட்சியுடன் நடைபெறும்; அதனால் நாடு வளம் பெறும் என்று கூறி மாநில சுயாட்சிக்காகப் போராடும் தமிழ்நாட்டு அமைச்சரவையின் முற்போக்கான எண்ணத்தைப் புரிந்துகொண்டு, அவர்கள் வழியில் நின்று, துணை வேந்தரிடமும் ஆட்சிக் குழுவிடமும் குவிந்து கிடந்த பல அதிகாரங்களைக் கல்லூரி முதல்வர்களுக்குத் தந்து கல்லூரி முதல்வர்களைப் பெருமைப் படுத்தியதற்காக மிகவும் மகிழ்ந்து நன்றி செலுத்துகிறோம்.

துணைவேந்தர் அவர்களே! உண்மையான செயல்திறம் கொண்ட தங்களுடைய ஆட்சிக் காலத்தில் நம் தாய்மொழியாகிய தமிழ் மொழிக்கு உரிய தகுதியும் பெருமையும் கிட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் வேண்டிக் கொள்ளுகிறேன். உலகில் உள்ள பிறநாடுகளில் எல்லாம் புரியாத செய்திகளைப் புரிந்த மொழியில்—தாய்மொழியில் சொல்லித் தந்து அறிவு வளர்ச்சிக்கு ஆவன செய்வார்கள். ஆனால்

நம்முடைய நாட்டிலோ தெரிந்த செய்திகளையே கூடத் தெரியாத மொழியில் சொல்லித் தந்து அறிவு வளர்ச்சிக்குத் தடை போடும் போக்குக் காணப்படுகிறது ஆகவே. இந்த நாடு உண்மையாகவே அறிவு வளர்ச்சி பெறுகின்ற வகையில் தமிழ் பயிற்று மொழித் திட்டத்துக்கு ஆதரவாக முனைந்து செயல்படுமாறு தங்களை வேண்டிக் கொள்கின்றேன்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் அடையாளச் சின்னத்தில் உள்ள குறிக்கோள் மொழி "Doctrina Vim Promovet Insitam" என்பதாகும். அந்தத் தொடருக்கு "Learning promotes (One's) natural innate talent" என்பது பொருள் என விளக்கம் தரப்படுகிறது தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகத்தின் குறிக்கோள் மொழி தமிழிலேயே இருத்தல் வேண்டும். தமிழக அரசின் அடையாளச் சின்னத்தில் இருந்த 'சத்திய மேவ ஜயதே' என்னும் தொடரை 'வாய்மையே வெல்லும்' எனத் தமிழக அரசு மாற்றியதுபோல் நம் பல்கலைக் கழகத்தின் குறிக்கோள் மொழியையும் "கற்றனைத் தூறும் அறிவு" "விழுச்செல்வம் கல்வி" என்று மாற்ற வேண்டும் என்று தங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

கலைக் கல்லூரிகளில் பட்ட வகுப்புக்களில் இரண்டாவது பிரிவாக (II Part) உள்ள ஆங்கிலத்தை அனைவரும் கற்க வேண்டும் என்று சட்டம் உள்ளது. அது போல் தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் பயிலும் அனைவரும் முதல் பிரிவாகத் (I Part) தமிழ் மொழியைத்தான் எடுத்துப் படிக்க வேண்டும். என சட்டமியற்ற வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன் தமிழல்லாத வேறு மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்களும் கட்டாயம் தமிழ் படித்துத்தான் தீரவேண்டும். தமிழ் நாட்டில் வாழ்ந்துகொண்டு தமிழ்நாட்டுச் சோறு தின்று, தமிழ் நாட்டுத் தண்ணீர் குடித்துத் தமிழ் நாட்டுக் காற்றை உயிர்த்து வாழும் வேற்று மொழியாளர்கள் செய்நன்றிக் கடனுக்காவது தமிழ் படிக்க வேண்டும் என்பது எங்களுடைய கருத்தாகும். துணைவேந்தர் அவர்களே, தங்களுடைய ஆட்சிக் காலத்தில் நம் சென்னைப் பல்கலைக் கழகம் பல புதிய பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்துத் தொன்மைச் சிறப்பு மேலும் சிறக்கும் வகையில் புது முறுக்குடன் செயல்படுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டிக்கொண்டு, அதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பும் உண்டு என்று உறுதி கூறி தங்கள் தொண்டும் புகழும் சிறக்கத் தாங்கள் பல்லாண்டு நலமுடன் வாழ வேண்டுமென்று வாழ்த்தி அமைகிறேன். வணக்கம்.

பி. விருத்தாசலம்,

19—11—1975

முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

பாடல்கள் பாடுகிறேன்.

புலவர். அ. வைத்திலிங்கம்,
மண்டபம் முகாம்.

1. முக்கனிச் சோலையிலே — தென்றல்
மோதிய வேளையிலே
பக்கத்தில் நங்கையுடன் — தமிழில்
பாடல்கள் பாடுகிறேன்.

2. செக்கர் நிறத்துடனே — கதிரோன்
செல்கிற வேளையிலே
ஒக்க ஒருத்தியுடன் — உலகம்
உய்வகை நாடுகிறேன்.

3. மிக்க நிலவினிலே — மீன்கள்
மின்னும் இரவினிலே
சொக்கும் அழகியுடன் — இன்பம்
சேர்ந்திடக் கூடுகிறேன்.

4. மக்கள் நடுவினிலே — கவிஞன்
மன்பதை வாழ்க்கையிலே
பக்கத் துணையாக — வாழப்
பாடல்கள் பாடுகிறேன்.

5. தக்க தமிழ்ப்பொழிலே — என்றன்
சந்தக் கவிகளிலே
புக்கதுன் பொன்னிழலே — என்று
போற்றியே பாடுகிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தமிழ்த்துறை

ஆசிரியர் பதினோராவது கருத்தரங்கு

திருக்குறட் கருத்தகம் — 1

அண்ணாமலை நகர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் சார்பில் ஆசிரியர் பதினோராவது கருத்தரங்கு அக்டோபர் 25, 26-ஆகிய இருநாட்களிலும் அண்ணாமலை நகரில் சிறப்புற நடைபெற்றது. இறைவாழ்த்தொடும் அண்ணாமலையரசர் வாழ்த்தொடும் நிகழ்ச்சிகள் தொடங்கின திருக்குறளாய்வு இக்கருத்தரங்கிற்கு முழுப் பொருளாகும். பல்கலைக் கழகப் பல துறை மாணவர்களும் பல் துறை ஆசிரியர்களும் ஆளவை மன்ற உறுப்பினர்களும் ஊர்ப்பெருமக்களும் சுமார் 500-க்கு மேற்பட்டவர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் டாக்டர் வ சுப மாணிக்கனார் தம் வரவேற்புரையில் இதுவரை சுமார் 200 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப் பெற்றன என்றும் திருக்குறளும், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முழுப்பொருளாக ஆராயப்பெற்றன எனவும் தொடர்ந்து நடத்திவரும் இக்கருத்தரங்குகளினால் மாணவர்களுக்கு ஆராய்ச்சியைக் கேட்கும் மனப்பான்மை பெருகியுள்ளது எனவும் கூறினர்.

பல்கலைக் கழக நிகழ்நிலைத் துணைவேந்தர் டாக்டர் வி பாலையா அவர்கள் கருத்தரங்கினைத் தொடங்கிவைத்து, இத்தகைய நிகழ்ச்சிகளால் பல்கலைக் கழகத்தின் பெருமை உயர்கின்றது எனவும், திரளான மாணவர்கள் வந்து கலந்து கொள்வது மகிழ்ச்சி தருகின்றது எனவும் நம் பல்கலைக் கழகம் ஒரு விடுதிக்கே திருவள்ளுவர் பெயரை வைத்துள்ளது எனவும், எங்கும் திருக்குறள் பரவியிருப்பதைக் காண்கின்றேன் எனவும் கூறிப் பாராட்டி மகிழ்ந்தார்

இணைவேந்தர் டாக்டர் அரசர் சர் முத்தையா செட்டியார் அவர்களின் வாழ்த்துரையையும் பிற பெருமக்களின் வாழ்த்துரைகளையும் படித்து புலவர் சோம. இளவரசு நன்றி கூறினர்.

25-10-75 சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணியளவில் திருக்குறள் கருத்தரங்கின் முதற் பகுதி பல்கலைக் கழக மானியக் குழு ஆராய்ச்சியாளர் திரு ஆ இராமசாமிப் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு அ ஞானப்பிரகாசம் 'மேனாட்டார்

நோக்கு' என்ற கட்டுரையில் மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்று கூறியிருப்பதும், குலவொழுக்கம் பற்றிக் கூறு திருப்பதும் 'ஆல்பர்ட் சுவைட்சரைக்' கவர்ந்த திருக்குறள் பகுதிகள் என்று எடுத்துக் காட்டினார். திரு. சு. சாமிஐயா 'திருக்குறளில் பாட வேறுபாடுகள்' என்ற தலைப்பில் பயனில்லாப் பாட வேறுபாடுகள், பயனுடைய பாட வேறுபாடுகள் என்று வகைப்படுத்திக் கொண்டு மழித்தல் - வழித்தல்; பொச்சாப்பு - பொய்ச்சாப்பு, செய்யாமல் செய்யாமை, கொல்லாது - கொள்ளாது எனவரும் வேறுபாடுகளை விளக்கினார். திரு. செ. வைத்தியலிங்கம் 'உரை வேறுபடும் குறட்பாக்கள்' என்ற தலைப்பில் காமத்துப்பாலில் வரும் தகையணங்குறுத்தல் என்ற அதிகாரத்திற்கும் அணங்குகொல் ஆய்மயில்கொல் எனவரும் தொடர்கட்கும் பலர் உரைகளை எடுத்துக் காட்டி ஆய்வுரை செய்தனர்.

26—10—75 ஞாயிறு முற்பகல் 9-30 மணியளவில் திருக்குறட் கருத்தரங்கின் இரண்டாம் பகுதி தமிழ்த்துறைத் துணைப் பேராசிரியர் திரு. க வெள்ளைவாரணனார் தலைமையில் தொடங்கியது. 'புலவர் குழந்தை உரை' என்ற கட்டுரையில் திரு ந. வீ. செயராமன் இவ்வுரையில் அதிகாரங்கள் மாறிக் கிடப்பதையும் பொருட்பாவில் மாறுகவுள்ள இயல்வைப்பு முறையையும் கூறி, தெய்வம், வானகம், மேலுலகம், தேவர், எழுமை முதலிய சொற்கட்கு இவ்வுரை பகுத்தறிவுப் பாதையில் கூறும் விளக்கத்தையும் எடுத்துக் காட்டினர். 'திருக்குறளும் கௌடலியமும்' என்ற கட்டுரையாசிரியர் திரு. பி சீ இராமாநுசாச்சாரி திருக்குறளுக்கும் கௌடலியத்துக்கும் உள்ள அடிப்படை நோக்கங்களை எடுத்துக்காட்டி ஒற்றர், அமைச்சர், கல்வி முதலான பொருள்களில் இரு நூல்களின் ஒற்றுமைக் கருத்துக்களைப் புலப்படுத்தினர். டாக்டர் சோ ந. கந்தசாமி 'திருக்குறளில் பௌத்தம்' என்ற கட்டுரைக்கண் கடவுள் வாழ்த்து என்ற அதிகாரத்தில் வரும் ஆதிபகவன் முதலான தொடர்கள் பௌத்த சமயக் கொள்கைகளை விளக்குவனவாக உள எனவும் கள்ளுண்மை கொல்லாமை முதலிய அறங்கள் வலியுறுத்தப்படுதற்குப் பௌத்தத் தாக்குதல் காரணம் எனவும் வள்ளுவரின் எண்ணத்தில் புத்தரின் பொன் மொழிகளும் இடம்பெற்றன எனவும் பன்னூல் மேற்கோள் காட்டி விளக்கினர், திரு ஆ. இராமசாமிப் பிள்ளை 'திருக்குறளில் புராணக் கூறுகள்' என்ற பொருளில் தாமரைக்கண்ணான், அடியளந்தான், உலகியற்றியான், இந்திரன் கூற்றுவன் எனவரும் பல்வேறு இடங்களைக் காட்டி, இக்கருத்துக்கள் பழங்காலந் தொட்டே தமிழ் மக்களிடையே நிலவி

வந்தன என்று மொழிந்தார். குறளில் புறத்திணைத் துறைகள் என்ற கட்டுரையாளர் திரு. துரை. பட்டாபிராமன் வஞ்சி, உழிஞை, வாகை என்ற திணைகள் வந்த இடங்களைக் காட்டி நாட்டுப் பற்றினையும் அன்பு நோக்கினையும் இப்பகுதிகள் வலியுறுத்துகின்றன என்று கூறினர். ஆய்வு மேல் ஆய்வு என்ற கட்டுரையில் திரு. சா. மு. பாலசுப்பிரமணியன் இயல்புடைய மூவர் என்ற தொகைக்கும் குடம்பை தனித்தொழிய என்ற குறட்கும் எழுதப்பட்ட பல்வேறு உரைகளை எடுத்துக்காட்டி விளக்கினர்.

'திருக்குறள் உத்திகள்' என்ற தலைப்பில் டாக்டர் வ. சுப. மாணிக்கனர் உரை வேறுபடுவதற்குரிய பல்வேறு காரணங்களை எடுத்துக் காட்டி வள்ளுவர் காலத்து வளர்ந்த புதிய தமிழ் நடையும் உரை வேறுபாட்டிற்கு ஒரு காரணமாகும் எனவும், சில மயக்கமான குறள்களுக்கு உரிய திறவுகோல் திருக்குறளில் பிற குறள்களில் உள எனவும், அறத்தாறிதுவென வேண்டா, ஐந்தவித்தான் ஆற்றல், நீரின்றியமையாது என்ற குறட்பொருள்களைச் சில உத்திகளால் தெளிவு செய்ய முடியும் எனவும் எடுத்துக் காட்டினர்.

திருக்குறட் கருத்தரங்கின் மூன்றும் பகுதி ஞாயிறு பிற்பகல் 2-30 மணியளவில் தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கனர் தலைமையில் தொடங்கியது. திரு. ச. தண்டபாணி தேசிகர் 'திருக்குறளும் சுக்கிர நீதியும்' என்ற தலைப்பில் அறம், சமுதாயம், முயற்சி, ஊழ் என்ற கருத்துக்களில் இரு நூலாசிரியர்க்கும் உள்ள மாறுபாடுகளை எடுத்துக் காட்டி வேறு சிலவற்றில் உள்ள ஒற்றுமைகளையும் விளக்கி, திருக்குறள் கூறும் அமைப்பு முறை தனியானது என்று முடித்தார். திரு. கொ. இலக்குமணசாமி திருக்குறளும் சங்க இலக்கியங்களும் என்ற கட்டுரைக்கண் அறம்பாடிற்றே எனப் புறநானூற்றில் வரும் தொடரையும் அறம்கூறும் ஆக்கந்தரும் என்ற திருக்குறள் தொடரையும் ஒப்பிட்டு அறம் என்ற பெயருடைய ஒரு நூல் திருக்குறளுக்கு முன்னும் இருந்ததோ என்று ஆராய்ந்தார் திரு. சி வேங்கடபதி 'பாவாணர் உரை' என்ற கட்டுரைக்கண் பரிமேலழகர் உரையின் சில பகுதிகளைத் தேவநேயப்பாவாணர் ஆங்காங்கு மறுத்துரைத்துத் தமிழ் மரபுக்கேற்பப்புத்துரை எழுதியிருப்பதைப் புலப்படுத்தினர், பல்கலைக்கழக மானியக்குழு ஆராய்ச்சியாளர் திரு. செ வேங்கடராமச் செட்டியார் 'திருக்குறளில் இலக்கண நெறி' என்ற தலைப்பில் சேக்கிழாருக்கும் சுந்தரருக்கும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்தது போலத் தொல்காப்பியரும் அகர முதல என்ற அடியைத்

திருவள்ளுவருக்கு எடுத்துக் கொடுத்தார் எனவும் இன்னிசை அளபெடை, தோன்றாப் பயனிலை முதலான இலக்கணக் கூறு கள் இந்நூலில் சிறப்பாக வந்துள்ளன எனவும் மொழிந்தார். திரு. க. வெள்ளைவாரணம் 'திருக்குறளில் சைவமும் வைண வமும்' என்ற சமயத் தலைப்பில் நாடு, மொழி, சமயம், இனம் முதலியவற்றைக் கடந்த பொது நூல் திருக்குறள் எனவும் இப்பொதுமையோடு சைவ வைணவ சமயங்கட்குரிய சிறப்புக் கூறுகளும் இடம் பெற்றுள எனவும் இது கருதியே பின்வந்த சைவ நூல்களில் திருக்குறட் கருத்துக்கள் நிரம்ப இடம் பெற் றுள எனவும் மக்கட்கு இறை, தாமரைக்கண்ணான் என்ற தொடர் கள் வைணவக் கொள்கையைக் காட்டுவன எனவும் விரிவுபட எடுத்து மொழிந்தார். டாக்டர் மு. கோவிந்தசாமி 'மொழி பெயர்ப்பு' என்ற தலைப்பில் ஆங்கிலேயர்களுடைய மொழி பெயர்ப்புக்கும் ஆங்கிலம் கற்ற தமிழறிஞர் மொழி பெயர்ப்புக்கும் உரிய வேறுபாடுகளைத் தலைப்பு அளவில் வைத்துக் காட்டி மொழிபெயர்ப்பு நூல்களும் ஓராற்றால் உரை நூல்களே என வும் அவற்றில் புதுப்பொருள்கள் உண்டெனவும் கூறினர். திரு. வெ. பழநியப்பன் 'களவுத்துறைகள்' என்ற கட்டுரைக் கண் களவியலில் அதிகாரக் குறள்கள் மாறுபடவில்லை. பரிமேலழகரின் காமத்துப்பால் பகுப்பு முறை அகப்பொருள் முறைக்கு ஏற்றது, தலைவன், தலைவி, தோழி என்ற மூன்று பாத் திரங்களே களவியலில் இடம் பெறுகின்றன என்று மொழிந்தார்.

கூட்டத்திற்கு வந்திருந்த தமிழ் வடமொழி ஆராய்ச்சி நிறு வன இயக்குநர் திரு மு. அருணாசலம் வள்ளுவரின் குறள்யாப்பு மிக உயர்ந்தது ஆதலின் பின்னையோர் அவ்வழிச் செல்லத் தயங்கினர் எனவும் திருக்குறளைப் பிற நாட்டவரும் அறிய ஆங்கிலத்தில் நூல்கள் எழுதிப் பரப்ப வேண்டும் எனவும் தமிழ்க் கலைகளைத் தமிழ் மரபோடு பயில வேண்டும் எனவும் கூறி கருத்தரங்குக் கட்டுரைகள் தரமாகவும் பயனாகவும் இருக் கின்றன என்று பாராட்டினர்.

டாக்டர் வ. சுப மாணிக்கம் தம் முடிப்புரையில் திருக்குறள் மேன்மேலும் பரவ வேண்டுமெனில் சமய நிறுவனங்கள்போல, திருக்குறள் நிறுவனம் வேண்டும் எனவும், சமயப் பெரியவர் களுக்கு அடியவர்கள் இருப்பதுபோலத் திருக்குறட்கும் குற ளடியார்கள் வரவேண்டும் எனவும் அப்போதுதான் திருக்குறள் இலக்கிய நூலாக மட்டுமன்றி இயக்க நூலாகவும் வளர்ந்து எல்லா மக்கட்கும் பயன் செய்யும் என்றும் அறிவுறுத்தினர். ஆசிரியர் திரு. உ. பழநி நன்றி கூற நாட்டு வாழ்த்துடன் கருத்தரங்கு முடிவு பெற்றது

'சங்க கால இராமாயண ஓவியங்கள்'

ஏ. ஏகாம்பரநாதன், எம். ஏ..
தொல்லியல்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

சங்க காலத் தமிழகத்தில் ஓவியக் கலை மிகவும் சிறந்த நிலையிலிருந்தமையை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூற்கள் வாயிலாக அறிய வருகிறோம். இவ்விலக்கியங்கள் ஓவியங்களை 'ஓவம்', 'ஓவு' எனவும்; இக்கலை வல்லுநர்களை 'ஓவியர்', 'வித்தகர்', 'வல்லோன்', 'கண்ணுள் வினைஞர்.' எனவும் அழைக்கின்றன. அக்காலத்தில் அரசர்களது அரண்மனைகளிலும், அரசியரின் அந்தப் புரங்களிலும், கோயில்களிலும், செல்வந்தர்களின் இல்லங்களிலும் ஓவியங்கள் இடம் பெற்றிருந்திருக்கின்றன. அறுமுகச் செவ்வேளின் படை வீடுகளுள் ஒன்றாகிய திருப்பரங்குன்றத்தில் தீட்டப்பட்ட இராமாயண ஓவியங்களைப் பற்றிய செய்திகளை இப்பகுதியில் காண்போம்.

சங்க இலக்கியத்தில் இராமாயணக் கருத்துக்கள் :

சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய புறநானூற்றில். இராமனது தேவியாகிய சீதையை இலங்கையரசன் இராவணன் கவர்ந்து சென்றமையை,

> "கடுந்தெற லிராம னுடன்புணர் சீதையை
> வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை"......

என்னும் பகுதியால் அறிகிறோம். (புறம். 378: 18—19). மேலும் போர் செய்வதில் ஆற்றல் மிக்க இராமன் அரிய மறையினை ஆய்தற்பொருட்டு ஆலமரத்தின் கீழ் யோக நிலையில் அமர்ந்ததாகக் கூறப்படும் செய்தி அகநானூற்றில் காணப்படுகிறது. (அகம் 70: 15–16)

இவ்விலக்கியங்களில் இராமனைப் பற்றியும், இராமாயணத்திலுள்ள சில கருத்துக்கள் இடம் பெற்றிருப்பினும் இராமன், திருமாலின் அவதாரங்களுள் ஒன்றாகச் சங்க காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் சிலப்பதிகார — மணிமேகலை காலத்தில்தான் இராமன் அவதார புருடனாக ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறான் என்பது இந்நூல்களிலிருந்து அறியக் கிடக்கும் செய்தியாகும். (Dr. R. Champakalakshmi. 'Vaishnava concepts in Early Tamil country". Journal of Indian History, 1972, p. 728).

எவ்வாறாயினும் சங்ககாலத் தமிழகத்தில் இராமாயண கருத்துக்கள் பரவத் தொடங்கியிருப்பது நன்கு புலனாகும்.

சங்க கால இராமாயண ஓவியங்கள்.

ஆலவாயை அடுத்துள்ள திருப்பரங்குன்றத்தில் எழுப்பப் பட்ட முருகப்பெருமானின் கோயில் மண்டபத்தில் வடமொழி இராமயணத்தில் வரும் காட்சிகளை விளக்கும் ஓவியங்கள் சில இடம் பெற்றிருந்தன. இதனை ...

" இந்திரன் பூசை இவளக லிகையிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
ஒன்றிய படியிதென் றுரைசெய் வோரும்
இன்ன பலபல எழுத்து நிலை மண்டபம்"......

என்பதால் தெரியவருகிறோம் (பரிபாடல். 19 46—53). அதாவது 'கவுதம முனிவனது மனைவியாகிய அகலிகையின் மீது காதலுற்ற விண்ணவர் தலைவனுகிய இந்திரன் ஓவியமும், அகலிகையின் ஓவியமும், கவுதம முனிவனது ஓவியமும், அம்முனிவனது சினத்தால் சாபம்பெற்ற அகலிகையினது கல்லுருவின் ஓவியமும், இவைபோன்ற பல ஓவியங்களும் நிறைந்து காணப் பட்ட திருப்பரங்குன்றக் கோயில் மண்டபம்' என்பதாகும். இங்கு அறுமுகச் செவ்வேளின் கோயில் மண்டபத்தில் இராமாயண ஓவியங்கள் இடம் பெற்றிருந்தது முக்கியமாகக் குறிப் பிடத்தக்கதாகும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளனைத்தும் வடமொழி இராமாயணத்தில் பாலகாண்டத்தில் (அத் 48) இடம் பெற் றுள்ளன. இராமாயணத்தில் இந்திரன் கவுதம முனிவரைப் போன்ற தோற்றத்தில் சென்று அகலிகையைக் கூடி மகிழ்ந்த தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் பரிபாடலில் இந்திரன் பூனை (பூசை) வடிவத்துடன் அகலிகையை அணுகியதாகக் கூறப் பட்டுள்ளது. இப்பூனை வடிவம் கொண்ட இந்திரனது ஓவிய மும் திருப்பரங்குன்றத்தில் தீட்டப்பட்டதை பரிபாடலால் அறி கிறோம் இக்கருத்து வேறுபாட்டின் காரணம் இன்னதென அறிவதற்கில்லை

தமிழகத்தில் விசயநகர, நாயக்க மன்னராட்சிக்கு முன்னர் இராமாயண ஓவியங்கள் தீட்டப்படவில்லை என்று கருதுவதற் கில்லை. பரிபாடலில் கூறப்பட்டுள்ள ஓவியச் செய்திகளிலிருந்து சங்ககாலத்திலேயே இராமாயண ஓவியங்கள் இடம் பெற்றமை நன்கு விளங்கும்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஓவியங்களில் இராமனது ஓவியங்கள் இடம் பெறவில்லை யெனினும், இராமாயணத்திலுள்ள சில பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளனவென்பது தெளிவாகும். திருப்பரங்குன்றத்திலுள்ள இராமாயண ஓவியங்களைப் பற்றிய செய்திகள் பரிபாடலில் காணப்படுகிறதேயன்றி தற்போது அவை எஞ்சி நிற்கவில்லை.

சென்ற இதழின் தொடர்ச்சி

"தென்னக மேதையும் சீனத்துச் செம்மலும்"

சி. இராமகிருட்டினன், பி ஏ. பி. எல்.,

"நல்லவையெல்லாம் கடனென்ப கடன் அறிந்து
சான்றாண்மை மேற் கொள்பவர்க்கு"

எல்லோரிடத்தும் அன்பும், அருள் உள்ளமும் கொண்டவனாக இருக்கின்றான், பணிவையே அணியாகக் கொண்டு பிறருக்கு உதவி செய்வதைத் தன் கடமையாக எண்ணுகின்றான். வாய்மையே பெரிதென மதித்து உள்ளத்தில் பொய்யாது ஒழுகி, உலக மக்களின் உள்ளத்தில் இடம் பெறுகின்றான்.

கன்பூசியசு கூறும் அறநெறியாளனும், அறிவு, இரக்கம், துணிவும் கொண்டு உயர்கின்றான். அவர் தன் பண்களின் ஏட்டில் (Book of Songs), அறநெறியாளனே அரசு கட்டிலில் ஏறும் புனித உரிமை பெறுகின்றான் என்றும் கூறுகின்றார்.

பெருந்தகை கூறும் சான்றோன், ஆளுவோனாகவும் இருக்கலாம்; அமைச்சனாகவும் இருக்கலாம்; அறவோராகவும் இருக்கலாம்; அல்லது இல்லறத்தானாகவும் இருக்கலாம். சமுதாயத்தில் எத்தகைய இடத்தில் இருந்தாலும், பொதுவான நெறிமுறைகளை ஏற்று வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தால், உயரலாம் வள்ளுவப் பேராசான், தமிழகத்தில் வாழ்ந்து, தமிழில் குறள் நெறிகளை வகுத்திருந்தாலும் அவர்கால நடப்புக்கள் அவரைப் பெரிதும் பாதிக்கவில்லை. இன்னும் தெளிவாகக் கூறினால், ஆசான் கருத்து அவர் வாழ்ந்த காலத்தை மையமாக வைத்து உருவாக்கப்பட்டதன்று காலத்தையும் கடந்து, உலக சமுதாயத்தில் ஒருவனாக வாழ்ந்து, உலகம் நீடிக்குமளவும் ஒருவனுக்கு எத்தகைய பண்பாடுகள், நெறிமுறைகள் தேவையென்பதையே சிந்தித்து அவரால் உருவாக்கப்பட்டவன் சான்றோன்

கன்பூசியசின் நெறிமுறைகள் பெரிதும் அவர் வாழ்ந்த காலத்தை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டவை. அவர் வாழ்ந்த காலம் சீனாவின் மைய அரசில் வலிவான அரசனோ, அரசோ இல்லாது பூசல்கள் நிறைந்த காலம் அன்றைய தேவை நல்ல குணங்களைக் கொண்ட வலிவான அரசன் அல்லது வலிமை வாய்ந்த மக்களைக் கொண்ட அரசு.

Book of Songs says"

"That great and noble prince displayed
The sense of right in all he wrought
The spirit of his wisdom swayed
Peasant and peer, the Crowd and the Court,
So Heaven that Crowned his sires restored
The Countless honours they had Known
for heaven eye Keepth Watch and Ward
The Mandate gave to mount the throne"

ஆகவே கன்பூசியசு, தான் உருவாக்கிய அறநெறியாளன் அரசு கட்டிலிலே ஏறி, பூசல்களை யொழித்து வலிமை வாய்ந்த ஆளுவோனாக மலரவேண்டுமென்று எண்ணியதில் வியப்பில்லை. அவரது சிந்தனை அவரது காலத்தை யொட்டியே செல்வதால், கன்பூசியசு தான் கண்ட அறநெறியாளன், மக்கள் நலம் பேணும் எதேச்சதிகார அரசை (Dictatorship of Benevalent - type) க் கட்டியாள விரும்பினர் போலும்.

அறநெறியாளன். அறிவு. இரக்கம். துணிவு (Wisdom, Compassion Courage) ஆகிய மூன்று குணங்களின் இயல்பு களைத் தெரிந்தவன். அவைகளின் வழித்தன் குணத்தை உரு வாக்குகின்றான். அவன் மக்களை அடக்கி ஆளும் துணிவு பெறு கின்றான்; மக்களை அடக்கி ஆளும் துணிவு பெற்றவன், நாட் டையும், பேரரசுகளையும் ஆளும் வலிவு பெறுகின்றான். (When a man understands the nature and use of those three moral qualities (Wisdom, Compasscin, Courage), he will under stand how to put in order his personal Conduct, character. When a man understands how to put in order his personal Conduct and Character, he will understand how to govern men When a man understands how to govern men, he will then understand how to govern nations and empires Wisdom of Confucius ley lin yutang)

சான்றோன், சிறப்பாக ஏற்றுக்கொள்ள வேண்டிய குண நலன்கள், அன்பு, குற்றங்களைச் செய்ய அஞ்சும் நாணம், யார் மாட்டும் செய்யும் ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகியவை களாகும்.

"அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையோ
டைந்து சால் பூன்றிய தூண்" குறள் 983

இக் குணங்களின் இயல்களைத் தெரிந்து, நல்லவைகளை யெல்லாம் ஏற்றுக் கடமை புரிகின்ற சான்றோன், மக்களை ஆளத் தகுதி பெற்றிருந்தாலும், மக்கள் உள்ளத்தில் இடம் பெறு வதையே பெரிதென மதிக்கின்றான்

உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். குறள் —294.

மக்களை ஆளுவதைவிட, அவர்கள் உள்ளங்களை ஆளுவ தைச் சிறப்பாகக் கருதுகின்றான் சான்றோன். மக்களின் எண் ணங்களை மதித்து நடக்கும் சான்றோன், சிறந்த சனநாயகவாதி யாகவே மலர இயலும்.

சமுதாயம்

புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வள்ளுவர் விரும்பு கின்றார். ஏழை, பணக்காரன், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதங்களை அவர் சாடுகின்றார். செல்வத்தைக் குவித்துத் தனக்கே பயன்படுத்தும் செல்வர்களை வன்கணவர் என்றும், பூரியார் என்றும் கூறுகின்றார்.

"ஈத்துவக்கும் இன்பம் அறியார் கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்" — 228

தானுடைமையைக் கண்டிப்பதிலிருந்து வள்ளுவர் பொது உட மையை விரும்புகின்றார் என்பது பெறப்படுகின்றது. ஏழை எளியவரின் கண்களிலிருந்து வழியும் நீரைத் துடைக்காத வேந்தர்களும், இரந்தே உயிர்வாழ வேண்டிய பிச்சைக்காரர் களைப் படைக்கும், இறைவனும், கெட வேண்டியவர்கள் என்று அவர்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குகின்றார் பெருந் தகை வள்ளுவர்.

பேராசான் காணும் சமுதாயம், பொதுவுடமைச் சமுதாயம். நாட்டிலும், சமுதாயத்திலும், சில பொறுப்பில் உள்ளவர்கள், சமுதாய நன்மைக்கே தமக்குள்ள அறிவையும், ஆற்றலையும், ஆக்கத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்பது அவர் காட்டும் நெறிமுறையாகும். சமுதாயத்துக்குப் பயன்படாதவர் யாரா யிருந்தாலும் பயனற்றவர்கள் ; ஒதுக்கப்படவேண்டியவர்கள்.

"சொல்லப்பயன்படுவர் சான்றோர் — கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்" — 1078

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர், அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை." — 555

மேற்கண்ட குறட்பாக்கள் பேராசானுக்கு மக்கள் பேரில் உள்ள அக்கரையும், அவர்களின் நலன்கள் புறக்கணிக்கப்படும் காலை ஏற்படும் விளைவுகளையும் கூறுகின்றன. பெருமகன் வள்ளுவர் காணும் சமுதாயம் மக்களை மையமாக வைத்துச் சுழல்கின்றது. "மக்கள் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பது குறள் தரும் குரல்.

சீனப்பெருமகன் கண்ட சமுதாயத்தில், மன்னனே மையமாக இருக்கின்றான். "மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" என்பது கன்பூசியசு காட்டும் கோட்பாடு மன்னன் மன்னனாகவும், அரசு ஊழியன், அரசு ஊழியனாகவுமே தொடர்ந்து இருக்கவேண்டும். சமுதாயத்தில் அவரவர்க்கென ஒதுக்கப்பட்ட இடங்களைக் காப்பாற்றிக் கொண்டு அவைகளை மாற்ற முயல்தல் தேவையற்றதென்பது சீனச் செம்மலின் எண்ணம் போலும் (Let the Prince, " prince, public servant, a public servant " china and Glandian India by Dr Carsun chang)

அரசும் மக்களும்

ஒரு நாட்டில் அரசும் மக்களும் இன்றியமையா அங்கங்கள். மக்களின்றி அரசு இருக்கமுடியாது. அரசின்றி மக்கள் ஒழுங்காகவும் வளத்துடனும் வாழ இயலாது. மக்களுக்காக அரசா, அரசுக்காக மக்களா என்ற கேள்வி எழுந்தால் அறிவில் கொஞ்சம் தெளிவுள்ளவனும், மக்களுக்காக அரசு என்று தயங்காமல் கூறுவான். மனித வாழ்வின் துவக்க காலத்தில் மக்கள் ஒன்று கூடி தங்களுக்கென ஒரு அரசை உருவாக்கிக் கொள்ள தீர்மானித்தனர். அந்த அரசு, மக்களையும், அவர்தம் உடைமைகளையும் பாதுகாக்கவும், அவர்களிடையே எழும் பூசல்களைத் தீர்க்கவும், மக்களுக்கு நல்வாழ்வு தரவும் பயன்படும் என்ற நோக்கமே அதை உருவாக்கக் காரணமாக அமைந்தது.

ரூசோ, லாக், காப்சு (Hobbes) போன்ற மேற்கு நாட்டு அரசியல் சிந்தனையாளர்கள், தமது நூல்களில், அரசு தோன்றியதன் அடிப்படைகளை விவரித்திருக்கின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய நமது திருவள்ளுவரும், சீன நாட்டின் கன்பூசியசும் அரசு இயங்க வேண்டிய தன் இன்றியமையாமையையும், அதன் நோக்கங்களையும், தெளிவாகச் சொல்லியிருக்கின்றனர்.

நாட்டில் ஒழுங்கையும் அமைதியையும் காக்கும் துரைத்தனமாக (Police State) அரசு செயல்பட்டால் போதும் என்ற ஒரு எண்ணம் மேற்கு நாடுகளில் நிலவிவந்த காலம் உண்டு

அத்தகைய எண்ணம், தீங்கானது என்று பல ஆண்டுகளுக் கப்புறமே மேலை நாட்டுச் சிந்தனையாளர்கள் உணர்ந்தனர். மக்களிடையே வளரும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை நீக்கி, நல்ல திட்டங்களைத் தீட்டி அவைகளை அமுல்படுத்தி மக்கள் வாழ்வில் இன்பம் சேர்ப்பது அரசின் கடமை. அமைதி காக்கும் (Police State) துரைத்தனம், நலம் பேணும் அரசாக (Welfare State) மாற, மேலை நாடுகள் நீண்ட பயணம் செய்ய வேண்டி வந்தது

வள்ளுவரும், கன்பூசியசும், நலம் பேணும் அரசையே வலி யுறுத்தியிருக்கின்றனர். திட்டம் தீட்டி, அதைச் செயல்படுத்திப் பொருள் ஈட்டி, ஈட்டிய பொருளை எல்லோருக்கும் பயன்படுமாறு காத்து, காத்த பொருளை, மக்கள் சமமாக அடையும்படி பங்கி டுதல் அரசின் கடமையெனப் பேராசான் கூறுகின்றார்.

இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லதரசு.

சீனமேதை, ஒரு அரசு மூன்று தேவைகளைப் பெற்று இயங்க வேண்டுமென்று விளம்புகின்றார் மக்களுக்குப் போதுமான உணவு நாட்டைக் காக்கப் போதுமான படை, மக்கள் ஆளு வோரிடத்தில் வைக்கும் நம்பிக்கை என்பவைகளாகும். இந்த மூன்றிலும், எது இன்றியமையாதது என்ற கேள்விக்கு, மேதை கன்பூசியசு, ஆளுவோரிடத்தில் மக்கள் கொள்ளும் நம்பிக்கை தான் என்று பதிலளித்தார். படையில்லாமலும், போதுமான உணவு இல்லாமலும், அரசு இயங்க முடியும் உலகம் தோன்றி யதிலிருந்து பல தலை முறைகளில் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் இறந்தனர். உலகில் அரசுகளுக்கிடையே போர்களும் நடந் திருக்கின்றன அதனால் அரசுகள் அழிந்துவிடவில்லை. "ஆனால் ஆளுவோரிடத்தில் நம்பிக்கை கொள்ளாத மக்கள் இயங்க இய லாது" (But a nation cannot exit without confidence in its ruler) என்று விளக்குகின்றார் கன்பூசியசு.

ஆளுவோரிடத்தில் மக்கள் நம்பிக்கை கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்திய கன்பூசியசு, அரசு மக்களிடம் காட்ட வேண்டிய அருளுள்ளத்தைப் பெரிதும் வலியுறுத்தவில்லை. அவர் வலியுறுத்தும் தேவைகளில் மக்களுக்குப் போதுமான உணவைச் சேகரிப்பதும் ஒன்று என்பது உண்மையே இது போதாது.

வள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தில், அரசின் கடமையென, வேண்டுவார்க்கு வேண்டுவன செய்தல், குடிமக்களின் தளர்ச்சி கருதி அவரிடம் கொள்ளவேண்டியதை விடுத்து அவர்களைப் பேணல், முறை செய்து போற்றல் என்பவைகளை வலியுறுத்துகின்றார்.

"கொடை அளி செங்கோல். குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி" குறள் 390

உணவுப் பொருள்களைப் பெருக்குவதுடன், ஓவாப்பிணியையும், மக்களுக்குத் தொல்லைதரும் சக்திகளையும் நீக்கவேண்டிய கடமையையும் விளம்புகின்றார் வள்ளுவர். இன்னும் ஒரு படிமேல் சென்று மக்கள் இன்பமாக வாழ அரசு ஆவன செய்ய வேண்டுமென்று வள்ளுவர் வலியுறுத்தும் பாங்கு நினைவுக்குரியதாகும்.

"பிணியின்மை செல்வம், விளைவு, இன்பம், ஏமம்.
அணி என்ப நாட்டிற்கிவ்வைந்து." (738)

"ஆங்கமை வெய்தியக்கண்ணும், பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு"

என்ற குறளில் வேந்தமைவு என்பது குடிகள் ஆளுவோரிடத்தில் கொள்ளும் அன்பும், ஆளுவோர் மக்களிடத்தில் காட்டும் அருளும் ஆகும். மக்களிடத்தில் ஆளுவோர் காட்டும் அன்பு, அறம், அருள் ஆகியவைகள் மூலம்தான், மக்களின் நம்பிக்கையை ஆளுவோர் பெற முடியும்.

அரசு, குடிமக்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப் பேராசான் பெரிதும் வலியுறுத்துகின்றார். இன்றைய சனநாயக நாடுகளிலும், பொதுவுடைமை நாடுகளிலும், வள்ளுவர் கூறும் அரசின் கடமைகளே பெரிதும் வலியுறுத்தப்படுகின்றன. சனநாயக நாடுகளில் "நலம் பேணும் அரசு" (Welfare State) என்றும். பொதுவுடமை நாடுகளில் "பாட்டாளிகளின் அரசு" என்றும் குறிப்பிடப்படுகின்றன. நலம் பேணும், அரசும், பாட்டாளிகளின் அரசும், மக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும். நலன்களையும் மையமாக வைத்துச் செயல்படுகின்றன.

கன்பூசியசின் கொள்கைகளைக் காட்டிலும். திருவள்ளுவரின் கொள்கைகளே இன்றைக்கும் பொருந்தும்; என்றைக்கும் பொருந்தும் என்பதில் ஐயமில்லை.

திருவள்ளுவரும், கன்பூசியசும் மாபெரும் மேதைகள். பெரும் சிந்தனையாளர்கள். மனிதர்களாகப் பிறந்தனர்; மனிதர்களாக வாழ்ந்தனர்; மனிதர்கள், மனிதர்களாக வாழத் தமது அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்தினர்; மனிதரில் மேம்பட்ட மனிதர்களாக மதிக்கப்பட்டனர்; இன்றும் மேம்பட்ட மனிதர்களாக மதிக்கப் படுகின்றனர்,

சென்ற இதழின் தொடர்ச்சி

குறளில் வீட்டியல்

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

காணப்பட்ட உலகுக்கு காணப்படாத கடவுளின் உண்மை நிலையினையும் தலைமையியல்பினையும் நிறுவப்படுவது போன்று. எழுதப்பட்ட எழுத்துக்களுக்கு எழுதப்படாத ஆதிநாதத்தை அகரமெனக் கொள்ளல் வேண்டுமென்பது வள்ளுவரது உள்ளம். இத்தகைய ஆதி அகரமே எல்லா எழுத்துக்களுக்கும் அடிப்படையாக நின்று தாயகமாய் விளங்கி. நாதமாத்திரையாய் சூக்கும நிலையில் நிலவித் திகழ்வதாகுமென்பது வள்ளுவரது கருத்து அகரவோசையினை யெழுப்பும் ஆதிநாதம் தானாய் வேறாய் உடனாய் இயங்கும் பண்பினை கடவுளின் முத்திறமாண்பினில் வள்ளுவர் விளங்கக் கண்டது பெறப்பட்டது காண்க. இதனையே மாணிக்கவாசகர், 'உலகின்கண் ஒரு பொருளும் நீயல்லையானாலும் நின்னை இன்றியமையாத ஆதாரமாகக் கொண்டல்லது ஒரு பொருளும் தனித்த செயல்கொண்டிருத்தலில்லை' எனும் கருத்து படுமாறு 'ஒன்று நீயல்லையன்றி யொன்றில்லை' என அருள்வாராயினர், அகரம் தனித்து நின்றும், அகரவோசையாகியும், உலகிலுள்ள மற்ற மொழிகளின் எழுத்துக்களெல்லாமாகியும், அவற்றை இயக்கியும் விளங்குவது போன்று, இறை தனித்தும், உலகெலாமாகியும் அவற்றை இயக்கிவருவதை வள்ளுவர் நிலை நிறுத்துவார் வேண்டி சமரச ஞான வாயிலாகச் சுட்டியுள்ளது சற்று சிந்திக்கற்பாலது.

வள்ளுவர் இறைவனது தலைமையியல்பினை இவ்வாறு அறுவுறுத்தியபின். உலகத் துயிர்கள் இறைவன் முன் அறிவற்ற அசேதனம் போல் அசைவித்தாலன்றி அசையாதும், அறிவித்தாலன்றி அறியாதும் இருப்பதினால். அவை 'வாலறிவனது' இயலுணர்ந்து அவனை ஆண்டானெனக் கொண்டு வணங்குதலின் இன்றியமையாமையினை

> கற்றதனால் ஆயபயனென் கொல், வாறைிவன்
> நற்றாள் தொழாஅர் எனின் ?

எனக் கூறியுள்ளார். இறைவனது அருளால் மக்களுயிர்கள் பெற்ற கல்வி கேள்வியாலாய அறிவின் பயனும் அவனையே அடைய வேண்டுமென்பதையும், வள்ளுவர் நிறுவி, 'நற்றாள்' எனும் சொல்லால் இறைவனது தனிப்பெருமையினையும் உயிர்களின் சிறுமையினையும் பகுத்துக் காட்டியுள்ளார். வாலறிவனது இயல்பினை கற்றல் கேட்டலாகிய பயனால் கண்டறிந்தஉயிர்கள்

என்றும் இறைவனையே நினைக்க] அன்னரது உள்ளக் கமலத்தின்கண் எழுந்தருளியிருக்கும் இறையின் முழு அன்பின் உண்மைநிலை அன்னவருக்குப் புலனாகுதல் இயல்பு. வாலறி வின் பண்பாகிய அன்பு நிலையினை இறையருளாலெய்திய உயிர் கள் தம் முள்ளத்தின்கண் இறைவன் ஏற்கனவே வீற்றிருந்த உண்மை நிலையினையுணர்ந்து இன்புறும். இவ்வண்ணம் உள்ள மலர் மிசை எழுந்தருளிய இறையின் கழலைச் சார்ந்த வண்ணமிருந்து இடையறாது சிந்தித்திருப்பவர், மிசை நில மாகிய வீட்டுலகின்கண் நீடு வாழ்வரென்பதை வள்ளுவர்,

மலர்மிசை ஏகினான் மாணடிசேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்

எனும் குறளால் உணர்த்தியுள்ளார்.

இறை இயல்பாகவே வேண்டுதல் வேண்டாமை யிலாது அளவற்ற அந்தண்மையுடன் தற்பெருமை யற்றவனாதலால், அவன் பாசங்களின் நீங்கி யோனாதல்பற்றி இறையருளை சிந் தித்து விருப்பும் வெறுப்பும் அற்று அற நிலையில் அன்பு நில வும் உள்ளத்தோடிருப்போர்க்கு துன்பம் அணுகாது பாழ்படும், மனக்கவலை ஒழியும் இரு வினையும் சென்றடையா. இதனை

வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை இல
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு

என்ற குறட் பாக்களால் வள்ளுவர் நுட்பமும் ஒட்பமும் சிறக்க மொழிந்துள்ளார்.

இருவினையும் சேராமையாற்போந்த பயனால் விளைவது நிலை யாய வீட்டின்பமாகும். இப்பேரின்பத்தைப் பெற இறைநெறி யாகிய பொய்தீர் அகத்து ஒழுக்க நெறியினை, உயிர்கள் சமரச ஞானத்தோடு கடைப்பிடித்தொழுகி, மரணமில்லாப் பெருழிவாழ் வெய்து மென்பதை

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ்வார்

என்ற குறட்பா வலியுறுத்தும். அறநெறியில் செல்லும் ஆற்ற லுடையார்க்கு யாண்டும் இடும்பை இல்லாதிருப்பதே மனக் கவலையினைப் போக்குவதென்றும். தனக்கு ஒப்பதும் மிக்கது மிலாது ஒப்பற்று நிற்கும் உவமையிலாதான் 'தாள் சேர்ந்து. ஒட்டுதற்குரிய மனக்கவலையினை மாற்றுக என

— தொடரும்

சிலம்பு புலம்புகிறது.

பேராசிரியர் நோ. தெய்வநாயகம், எம். ஏ., பி எசி. டிப்-இன்-அக்.

சென்ற இதழின் தொடர்ச்சி

எனவே செங்குட்டுவனின் நோக்கு- நூனெறி புலவர்களால் இருநோக்காக விடையறுக்கப்பட்டு மகிழ்ந்தது. ஒரு நோக்கு உரை-பிறி தொன்று செயல். உரை - கல் லெடுத்தல், நீர்ப் படுத்தல் பற்றி உரைத்தமை. செயல்- அது பற்றிப் பின் நடுகற் காதையில் மிக அழகாக அடிகள் விளக்குகிறுர் அதாவது அந் நூனெறி மக்கள், குன்றக் குறவர் கண்ணகியாரைத் தெய்வமாக வழிபட்ட; நெடுவேள் குன்றத் தாழ்வரையில், வேங்கைக் கானலிலேயே வேண்மாளின் விருப்பிற்கேற்ப அரச குடியினரும். மக்களும் வணங்கும் நிலையில், சிறப்புடைத்தாக, தங்களின் நூலறித் திறமைகளை எல்லாம் நூனெறிகளினின்றும் பிறழா நிலையில் திறம்பட நிறுத்தி பால் பெற வகுத்த பத்தினிக்கான கோட்டம் ஒன்றினை அமைத்திருந்தார்கள் என்பதேயாம் இதனை ஈற்ற யலுக்குமயற் காதையாம் நடுகற் காதையின் 218 முதலாக 234 வரை உள்ள வரிகள் நன்கு புலப்படுத்துகின்றன

செங்குட்டு — வஞ்வாய்மொழி

குட்டுவன் வடபுலச் செலவினை வெற்றியோடு முடித்து வஞ்சி திரும்பிய பின்னுள். மாடலனறவுரையால் வேள்வி செய்யத் துணிந்து பேரோலக்கத்திலிருந்தே

"கேள்வி முடித்த வேள்வி மாக்களை
மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக் கொள"
ஏவினன் — (28; 182—185)

பின்

"ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கி......
மன்னர்க்கேற்பன செய்க நீயென
வில்லவன் கோதையை விருப்புடனே வினன்"
(28: 203 — 206)

அதன் பின்

"சிறையோர் கோட்டம் சீமின் யாங்கணும்
கறைகெழுநாடு கரைவீடு செய்ம்மென

அழும்பில் வேளோடாயக் கணக்கரை
முழங்குநீர் வேலி மூதூரேவி;'
(உ8: 203 — 206)

விடுத்தான்.

இவற்றில் வில்லவன் கோதை, வேளாவிக்கோ மாளிகைக்கு ஆரிய அரசரை, அழைத்துச் செல்ல சிறைக் கோட்டத்திற் கேவப்பட்டான். அழும்பில் வேளும். ஆயக் கணக்கரும் கடற் கரைப் பட்டனத்திற்கு அனுப்பப் பெற்றனர். ஆயின் நான் மறையாளர் எங்கேவப் பட்டனர் என்பது இவண் விளக்கப்பெற வில்லையாயினும் அடுத்த வரந்தருகாதை அவர் சென்ற விடத் தினைக் குறிக்கின்றது. விளக்கம் அடுத்துக் காண்போம்.

இறுதியாக நங்கையினைக் கடவுள் மங்கலஞ் செய்ம்மாறு ஒரு சிலரை அரசன் ஏவினன். அவர்கள் அறக்களத்து அந் தணரும், சிறப்புடைக் கம்மியரும், ஆசானும் பெருங்கணியுமே யாவர் நெடுவேள் குன்றத் தாழ்வரையில் நூனெறி மாக்களால் அமைத்து வைக்கப்பட்டுள்ள பத்தினிக் கோட்டத்துள், மங்கலதேவிக் கோயிலுள் கண்ணகி தேவியாரை இமயக் கல்லில் அந்நூனெறி மாக்களின் உதவியோடு உருவெழுதி கடவுள் மங்கலஞ் செய்யு மாறு அவர்களை ஏவினன் அரசன் என்பதனை

'அறக்களத் தந்தணர் ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடுஞ் சென்று
மேலோர் விழையும் நூனெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து
இமையவர் உறையும் இமயச் செவ்வரை
சிமயச் சென்னித் தெய்வம் பரசி.....
கடவுண் மங்கலஞ் செய்மாறே வினன்''......
— (28: 221 — 233)

என அடிகள் அழகாக உரைத்துள்ளார்.

கடவுள் மங்கலஞ் செய்தற்காகத் தன் ஆசானையும், பெருங் கணியையும், கடவுள் உருவெழுத சிறப்புடைக் கம்மியரையும், சிமயச் சென்னித் தெய்வம் பரச அறக்களத்து அந்தணரையும் அவ்வத் தொழிற்கேற்றுரை அனுப்பி முன்னமேயே நூலறி புலவோராகிய நூனெறி மாக்களாம் மனை கோலுவாரைக் கொண்டு பத்தினிக் கோட்டத்தினையும் பால் பெற்ற நிலையில் அமைத்து வைக்கச் செய்த செங்குட்டுவனின் அறிவுத் திறத் தினை என்னென்று புகழ்வது?!

ஒக்கவே பரசினர்

கண்ணகி தேவியார் வணக்கம் யாவர்க்கும் பொதுவான ஒன்றேயாம். நெடுவேள் குன்றத் தாழ்வரையில் கண்ணகியாரின் இறப்பிடத்தலேயே கோட்டமெடுத்து வழிபட்டமை இன்றளவும் தமிழகத்தே தொடர்ந்து வரும் வழிபாட்டு முறையேயாம். தாம் தஞ்சையில் தலைமை கொண்டிருந்தும் அரிஞ்சயன் துஞ்சிய ஆற்றூரிலேயே அவனுக்குப் பள்ளிப் படையாகிய அரிஞ்சயேச்சுரத்தினை முதலாம் இராசராசன் எடுப்பித்தான் என்பது ஈண்டறியத்தக்கது அம்முறையில் கடவுள் மங்கலஞ் செய்யப்பட்ட கண்ணகியாரை வழிபட அம்மலைப் பரப்பிற்கு வந்துற்றோர் பல்வேறு வகையினராவர் அவர்கள் மன்னர்கள், கண்ணகியின் உற்றார், அமைச்சர்கள். தளபதிகள், ஆசான். சிறுவர் குறவர். கணிகள், படைஞர். தொழிலாளிகள். பொது மக்கள், பெண்டிர், அந்தணர் போன்ற பல தொழில், இன அடிப்படையில் வேறுபட்டவராவர்

மன்னர்களாக: பேரரசன் செங்குட்டுவனும், ஆரிய அரசர்களும் குடகக் கொங்கரும். மாளுவ வேந்தரும் கடல் சூழ் இலங்கை கயவாகு வேந்தனும் இன்றேரன்னோராவர்,

அமைச்சர்களாக: அழும்பில்வேள் ஐம்பெருங் குழுவினர்,

தளபதிகளாக; வில்லவன் கோதை போன்றோர்,

அந்தணராக: மாடலன் மறையோன் அறக்களத்தந்தணர்.

பொதுமக்களாக: அரட்டன் செட்டி, சேடக் குடும்பி, வஞ்சி நகரத்தார் போன்றோர்,

உற்றாராக; தேவந்தி. காவற்பெண்டு. ஐயை முதலியோரும் குறுந்தொடி மகளிரும்

பெண்டிராக: வஞ்சி மகளிர், ஆயத்தார் முதலியோரும்

இன்னும் தொழிலாளரும். குறவரும் படைஞர்களும் ஆங்கிருந்து தேவியினை வழிபட்டமையினை வாழ்த்து, வரந்தரு காதைகள் புகலுகின்றன. இவ்வாறு குன்றக் குறவர்கள் மட்டும் வணங்கிய பத்தினியை அனைவரும் மன்னர் முதல் மக்கள் வரை ஒக்க நின்று வணங்கியமையான் 'பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' எனக் கூறிய பத்தினிக் கோளும் நிறைவேறியதறிக.

— தொடரும்

கையறவு

7—12—'75 ஆம் நாள் மறைந்த பெருந்தகவாளர் சி. வேதாசலம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஆற்றிய தொண்டினை நினைந்து இசைத்த கையறுநிலை

1) சிந்தைதனிற் செம்மையும்,கொள் செயலிற் பேச்சிற்
றெளிவுடைய குறிக்கோளும், பரந்த நோக்கும்
நிந்தையிலா நேர்மையுங்கொண் டிலங்கி நாளும்
நெஞ்சாரப் பணியாற்றி மற்ற வற்றைச்
சொந்தமெனக் கருதாமல் தூய்மை யோடு
துலங்கியநற் பெருந்தகையே! அறிந்தோ ரெல்லாம்
வந்தனைசெய் தேத்தும்வகை வாழ்ந்த நல்லோய்!
வாயாரச் சி. வி. என் றேத்தப் பண்பார்.

2) அறத்தகையோ டினியபணி புரிந்த அண்ணல்!
அறிவுடையோர் பாராட்டும் நண்பு சான்றோய்!
திறத்தினொடு மேற்கொண்ட கடமை தன்னைச்
செயலாற்றிப் புகழ்விளைத்த செம்மால்! யாவும்
குறித்தபடி நிகழ்த்தமுயன் றரிதிற் செய்யும்
குணக்குன்றே! நடுவுநிலை தவருக் கோவே!
மறுத்தொருவர் பேசாமல் திட்ட மிட்டு
வாழ்ந்தபெருந் தகவுடைய தமிழ்ப்பண் பாளா!

3) நினைவெல்லாம் இனிக்கும்வகைத் தமிழ்ச்சங் கத்தின்
நிறைவேற்றுக் கழகவுறுப் பினராய் வந்து

தனையொக்கும் புகழ்தமிழ வேளை யொப்பத்
தளராமல் அமைச்சேற்றுத் தமிழைப் பேணி
அனையொப்ப வளர்த்தரிய தொண்டு செய்த
ஐயா! வேதாசலமே! சொற்க ளாலே
வனையவொண்ணுப் பெருந்துயரில் எம்மை யாழ்த்தி
வான்புகுந்தாய்ச் சுற்றமெலாம் வருந்த அந்தோ!

4) இசையுணர்வும் தமிழறிவும் இணைந்த சிந்தை
எழிலுடையாய் உனதரிய இசையை நாளும்
நசைபெருகப் பேசிமகிழ் வுற்றோ ருள்ளம்
நடுக்கமுறப் பிரிந்தனையே. பொதுத்தொண் டேனும்
வசையொழியப் புரிவதுதான் சால்பென் றோதி
வழிகாட்டிச் செயல்புரிந்த வள்ள லேயுன்
இசைமுழுதும் திசைபரவி நிற்குங்காலை
எமைவிட்டுப் பிரிதல்நல மாமோ ஐயா!

5) பகைநொதுமல் நட்பென்னும் பாகுபாடும்
பாசம்உற வென்கின்ற பரிவும் நோக்காய்
தகைவளரும் நடுவுநிலை தவறு தாற்றித்
தமிழ்வாழத் தமிழ்நாடு வாழநாளும்
வகைதெரிந்து தொண்டாற்றித் தனது வாழ்வை
வழங்கியநற் பெருமகனே! வானுற் றுய்நின்
தொகைபெருத புகழ்போற்றி வணங்குகின்றோம்
தூயபரசிவ வெளியில் துலங்குவாயே!

பேராசிரியர்

ச. பாலசுந்தரம்.